# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.10/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆதிமூலம் | மதம் | : இந்து |
| த/பெ | : முத்து நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : இலுப்பூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

09.01.2025

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 22 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 22 பிரதிவாதிகளுக்கு எதிராகதான் நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எனது உறவினர்களை தவிர்த்து மற்றவர்கள் மீது பரிகாரம் கேட்டுள்ளேன். எனது உறவினர்களை நான் ஏன் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் என் அக்கா, தங்கைகளுக்கு ஏற்கனவே செட்டில்மெண்ட் செய்துவிட்டேன். அதுபோல் என் அண்ணன், பெரியப்பா பிள்ளைகளுக்கும் தனித்தனியாக இடம் கொடுத்துவிட்டேன். எனக்கு வழக்கு சொத்துதான் உள்ளது.

2. நான் என்ன புல எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.60/43 ஆகும். அ.வ.எண்.9/2021ல் உள்ள நாகபூஷணம் எனது உறவினரா என்றால் துாரத்து உறவில் மாமா ஆவார். வழக்கு சொத்தின் நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் கிழக்கே ரோடு, மேற்கே கோவிந்தசாமி நாயுடு, தெற்கே கோவிந்தசாமி உடையார், வடக்கே அண்ணாமலை உடையார் ஆகும். இந்த ஒரே சொத்தைதான் நான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் எனது சொத்தை அவர்களது சொத்து என சொல்லியுள்ளார்கள்.

3. 1 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் எந்த பக்கம் உள்ளார்கள் என்றால் வடக்கு பக்கம் உள்ளார்கள். ஆதியில் தாவா சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் மாரியப்ப நாயுடுக்கு பாத்தியம். மாரியப்ப நாயுடு பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் தற்போது இல்லை. ஏற்கனவே இருந்தது. தற்போது பெருமாள் நாயுடு, முத்து நாயுடு பெயரில் உள்ளது. மாரியப்ப நாயுடு பெயரில்தான் பட்டா இருந்தது என்பதற்கு ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)